செ.வெ.எண்: 51 நாள்: 21.01.2017

**புதுக்கோட்டை மாவட்டத்தில் 930 மாணவ மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டிகளை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் வழங்கினார்.**

---

புதுக்கோட்டை மாவட்டம், விராலிமலை சட்டமன்ற தொகுதியில், பள்ளிக்கல்வித்துறையின் சார்பில் மாணவ, மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் அவர்கள் மாணவ, மாணவியர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகளை வழங்கி பேசியதாவது:

தமிழகஅரசு பள்ளிக்கல்விதுறையின் கீழ் பல்வேறு திட்டங்களை அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வருகிறது. இதன்படி தமிழக அரசு பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவிகளுக்கு பல்வேறு விலையில்லா பொருட்களை வழங்கி வருகிறது. அதனடிப்படையில் நமது மாவட்டத்தில் விராலிமலை சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட மருதாந்தலை அரசு மேல்நிலைப்பள்ளியில் விலையில்லா மிதிவண்டிகள் 65 மாணவ, மாணவிகளுக்கும், இலுப்பூர் அரசினர் மேல்நிலைப்பள்ளியில் 455 மாணவ, மாணவிகளுக்கும், ஆர்.சி மேல்நிலைப்பள்ளியில் 125 மாணவிகளுக்கும், விராலிமலை அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளியில் 285 மாணவிகளுக்கும் என மொத்தம் 930 மாணவ, மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டிகள் வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் மாணவ மாணவிகள் விரைவாக பள்ளி சென்று கல்வி கற்க முடியும். மருதாந்தலை அரசினர் மேல்நிலைப்பள்ளிக்கு பழுதடைந்த மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி சரிசெய்யப்படுவதுடன் பள்ளி சுற்றுச்சுவரும் முழுவதுமாக கட்டிக்கொடுக்கப்படும்.

மேலும் தமிழக அரசு மாணவ மாணவிகளின் கல்வித்தரத்தை மேம்படுத்தும் வகையில் விலையில்லா காலணிகள், பேருந்து பயண அட்டை, மடிக்கணினி, சீருடைகள், வண்ண பென்சில்கள், கிரையான்ஸ் புத்தகப்பை, நோட்டுகள், உள்ளிட்ட 14 வகையான கல்வி உபகரணங்களும், இடைநிலைக் கல்வியை இடைநிற்றலின்றி தொடர சிறப்பு ஊக்கத்தொகை அளிக்கும் திட்டத்தின் கீழ் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் 10 மற்றும் 11-ஆம் வகுப்பு மாணவ, மாணவியருக்கு ரூ.1500/-ம், 12 ஆம் வகுப்பு பயிலும் மாணவ, மாணவியருக்கு ரூ.2000/-மும் கல்வி ஊக்கத்தொகையாக அவர்களது பெயரில் வங்கிகளில் முதலீடு செய்யப்பட்டு மேல்நிலை கல்வி முடிந்தவுடன் வழங்கப்படுகிறது. எனவே, தமிழக அரசின் இத்தகைய நலத்திட்ட உதவிகளை பெறும் மாணவ, மாணவிகள் இதனை உரிய முறையில் பெற்று கல்வி கற்று வாழ்வில் முன்னேற வேண்டும் என்றும் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் பேசினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.அ.ராமசாமி, கந்தர்வக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் திரு.பி.ஆறுமுகம், மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் திருமதி.சாந்தி, மாவட்ட கூட்டுறவு ஒன்றியங்களின் தலைவர் திரு.இரா.சின்னத்தம்பி, வருவாய் கோட்டாட்சியர் திரு.மு.வடிவேல்பிரபு, முன்னாள் ஒன்றியக்குழுத்தலைவர் திரு.சுப்பையா, கூட்டுறவு சங்கத்தலைவர் திரு.ராமசாமி, ஆத்மா குழுத்தலைவர்கள் திரு.சாம்பசிவம், திரு.பழனியாண்டி, முன்னாள் பேரூராட்சித்தலைவர் திரு.குருபாபு, முன்னாள் உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள், கூட்டுறவு சங்கத்தலைவர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**